DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**LAOP.No.63/2023**

PW. No. 1

| | |
|---|---|
| Name | : P.B.Jagan Mohan |
| Father's Name | : Bakthavathsalam |
| Age | : 76 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 4th day of November, 2025.

**குறுக்கு விசாரணை :-**

எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வழக்குச் சொத்தின் உரிமை வழிவழியாக எவ்வாறு வந்தது என்று நான் எனது கோருரிமை மனுவில் கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணம் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். நான் எனது கோருரிமை மனுவில் குப்புசாமி மற்றும் துளசிங்கம் ஆகியோர்களுடைய வாரிசுகள் யார்யார் என்று கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் மற்றும் பக்தவத்சலம் ஆகியோருடைய வாரிசு சான்றிதழ்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன், நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. குப்புசாமி, துளசிங்கம், கோவிந்தராஜ் மற்றும் பக்தவத்சலம் ஆகியோர்கள் சொத்தின் உரிமையாளர்கள் என்பதற்கு வருவாய்துறை ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. குப்புசாமி மற்றும் துளசிங்கம் தியான மந்திரம் எனப்படும் பஜனை கூடம் ஏற்படுத்தினார்கள் என்றால் சரிதான். அது இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தியான மந்திரத்தில் பொதுமக்களும் வழிபாடு செய்யலாம் என்றால் சரிதான். ராதாகிருஷ்ணசுவாமி தியான மந்திரம் டிரஸ்ட் என்று அழைக்கபடக்கூடிய ராதா கிருஷ்ண பஜனைக் கூடத்தில் டிரஸ்டிகள் குப்புசாமி, துளசிங்கம், கோவிந்தராஜ் மற்றும் பக்தவத்சலம் ஆகியோர்களின் வாரிசுகள் என்பதை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது கோருரிமை மனுவில் ராதாகிருஷ்ணசுவாமி தியான மந்திரம் டிரஸ்ட் என்று அழைக்கபடக்கூடிய ராதா கிருஷ்ண பஜனைக் கூடத்தின் மற்ற டிரஸ்டிகள் யார்யார் என்று கூறயுள்ளேனா என்றால் இல்லை. 2008 ல் ஏற்படுத்தப்பட்ட டிரஸ்டில் பஜனைக்கூடத்திற்கான சொத்து காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எனது கோருரிமை மனுவில் நிலஎடுப்பிற்குள்ளான இடத்திலுள்ள கட்டிடம், சொத்தின் மதிப்பு, சொத்துவரி விதிப்பு, கட்டிட அனுமதி, திட்ட அனுமதி ஆகியவற்றை கூறியுள்ளேனா என்றால் இல்லை. நிலஎடுப்பு நடவடிக்கைகளின் போது தனிநபர் பேச்சுவார்த்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், நானும் கலந்து கொண்டோம். அந்த நடவடிக்கைகளில் நில எடுப்பு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும், உயர்நீதிமன்றத்தில் O.P.No.448/2022 வழக்கு நிலுவையில் இருப்பதாகவும் கூறினேன் என்றால் சரிதான். அதனால்தான் இழப்பீடு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

O.P.No.448/2022 மனு யார் தாக்கல் செய்தது, எந்த பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது, உத்தரவு எதுவும் பிறப்பக்கப்பட்டதா என்றால் உத்தரவு பிறப்பக்கப்பட்டது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நில எடுப்பிற்குள்ளான சொத்தின் மதிப்பு சதுரடி ரூ.20,000/- என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 முதல் 3 கோருரிமையாளர்கள் சொத்தை பஜனைக் கூடத்தின் டிரஸ்டிகள் என்ற முறையில்தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். குப்புசாமி மற்றும் துளசிங்கம் வழிவந்த வாரிசுகளுக்குத்தான் மேற்படி பஜனை மடத்திலும், அதன் சொத்திலும் உரிமையுள்ளது என்றால் சரிதான். மேற்படி பஜனை மடத்தை நிர்வாகம் செய்ய ஏற்படுத்தப்பட்ட 4 வது டிரஸ்டிற்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும், 1 முதல் 3 கோருரிமையாளர்களுக்கு எந்த இழப்பீடும் பெற உரிமையில்லை என்றாலும் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |